

Vol.27 | No. 7 | July 2023
The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்





Silver Jubilee & Academic year Inauguration
St. Mary's Minor Seminary, 24.06.2023



Youth Retreat, St. Alphonsa College of Arts and Science, 16-18.06.2023



Mathar Jothis, Yearly Activity Inauguration,
Kalluvilai, 10.06.2023



*Kattalai Vaippu*, Marthandam,
21.06.2023



*Kattalai Vaippu*, Kulasekharam,
22.06.2023

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 27 NO :07 JULY 2023



# இறையருள்
# IRAIARUL

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| மறைக்கல்வி | 08 |
| குழந்தை இயேசு இயக்கம் | 10 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 11 |
| இல்வாழ்வு இயக்கம் | 15 |
| அருட்சகோதர்களிடமிருந்து | 17 |
| புலரி சமூக சேவை சங்கம் | 18 |
| மறைமாவட்ட செய்திகள் | 20 |
| மறைவட்ட செய்திகள் | 23 |
| Feastdays of Rev.Fathers | 30 |
| MONTHLY AGENDA - JULY 2023 | 31 |
| BISHOP'S ENGAGEMENTS | 32 |

## Editorial Board

Patron

**His Excellency**

**Mar George Rajendran SDB**

Chief Editor

**Fr. Joseph Santhosh**

Associate Editors

**Mr. Edwinson**

**Mr. Iyathurai**

**M.R.Merin Sujith**

Published by:

**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

DTP & Design

**M.R.Merin Sujith**

Printed at

**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/147/2023**

**30 June2023**

**Dear Readers,**

Greetings and prayerful wishes Bishop's House, Thuckalay!

On 3 July, we shall celebrate the solemnity of St Thomas, the Apostle, who we firmly believe and acknowledge to be the father of our Syro-Malabar church. The Dukrana feast, as it is called, forms an important annual landmark in our Church. Every year, it is celebrated with great solemnity. Hence, in this circular, I want to reflect with you, a significant characteristic that we notice in the life of St Thomas, namely, his doubt regarding the resurrection of Jesus. He is frequently known as doubting Thomas. We shall briefly examine the concept of doubt itself so that we can appreciate its importance in his growth as a committed and outstanding apostle of Jesus Christ.

What is doubt? It is often defined as a state of indecision or hesitancy concerning accepting or rejecting a given proposition. Thus, doubt is opposed to belief. But doubt is also contrasted with certainty. Since it seems intelligible to say that there are many things we believe without being completely certain about them, it appears that we may not have a unitary concept of doubt. Some common synonyms of doubt are dubiety, mistrust, scepticism, suspicion, and uncertainty. While all these words mean "lack of sureness about someone or something," doubt suggests both uncertainty and inability to make a decision.

Although doubt is often associated in philosophy with scepticism, historically the relationship between the two is complex.

Moreover, some philosophers deny that sceptical arguments have any essential connection with inducing doubts.

Sceptical doubts, as philosophers understand them, differ from ordinary doubts in their depth and generality. We all have doubts about some things. But the philosophical sceptic wonders whether we ever have the slightest reason to believe one thing rather than another. However, the reasonableness of such doubts – and even their intelligibility – remains controversial. The various attitudes philosophers adopt concerning the status of sceptical doubts characterize the main approaches to epistemological theory.

For St Augustine, doubt is a required step in the journey towards truth. Socrates believed that doubt was an expression of the truth. You cannot doubt unless there is a truth originating from it. During the Middle Ages, scholastic teachers brought back St Augustine's lesson and ancient Greek rhetoric. They did so with

apparently unsolvable doubts and dilemmas. They measured the exactitude of reasoning like the truth of God always won out over the doubts of man.

For Rene Descartes, doubt is the origin of wisdom. In his 'Meditations on First Philosophy', René Descartes discusses the idea of doubt. He says that without a doubt, we could not even conceive the existence of anything outside of our minds.

Doubt is the first step in gaining knowledge; without it, we could not progress. Doubt means we are questioning our beliefs and prepared to learn new things. It also means we are willing to look for new options to improve our lives. Without doubt, we probably would not upgrade on mindsets and perspectives about the world or look for better ways to become better versions of ourselves.

Doubt is necessary for change because it reveals where we might be wrong about something. Doubt often causes us to stop for a moment and re-evaluate our opinions, beliefs and assumptions. It can help us to see what needs to change so that we can make improvements in our lives.

Doubt is vital to science. Scientists question everything.

Curiosity and doubt drive scientific discovery. “I would rather have questions that can’t be answered than answers that can’t be questioned,” Richard Feynman said.

Doubt is a sign that you have an open mind and a willingness to learn. Doubt also signals that you are willing to adapt and change based on new information.

We can speak of three types of doubt, namely, justified doubt, unjustified doubt, and blind optimism. Justified doubt occurs when you are presented with evidence that suggests that your current belief may not be correct. It can lead to greater self-awareness, increased critical thinking skills and increased appreciation for evidence-based thinking. Justified doubt can also help you avoid premature closure and confirmation bias, which are cognitive biases that cause you to only see things in the light that supports your existing beliefs.

Unjustified doubt occurs when you assume something without sufficient evidence to support it. It can lead to irrational beliefs and limit your ability to learn from new experiences because it prevents you from considering new possibilities.

Blind optimism occurs when you fail to consider all possible outcomes before deciding or taking action. This type of thinking can result in poor choices and poor decision-making.

Doubt is an uncomfortable feeling. It makes us feel insecure and uncertain about ourselves, our actions, and the world around us. But these are precisely why doubt is such a crucial part of the human experience.

Sometimes, we tend to see doubt as a negative thing, but intrinsically, it is not often the case. Sacred Scripture reveals that God, sometimes, tolerates the doubting man, and enables him to attain knowledge through such a medium. This attests to the veracity of the Persian Proverb: “Doubt is the key to knowledge.” Needless to say, doubt precedes knowledge.

Importing this idea into our Christian parlance, it would not be out of place to say that doubt precedes faith. Faith that has not

first wrestled with doubt may not be faith at all. This we see in the person of St Thomas, the Apostle, whose doubt wrestled with his faith, leading to his profession of faith in Christ: "My Lord and my God"; and this has come to serve as the basis of our faith. Thanks to the necessary doubt of St Thomas! Celebrating the feast of St Thomas on 3 July calls us to evaluate our faith in Christ Jesus and reaffirm our trust and belief in him. Thomas' doubt, according to St Gregory the Great, was "more useful to our faith than the faith of the believing disciples, while he is brought back to faith by touching, our minds are set free from doubt and established in the faith."

In his gospel, St John opens a new trail before us to arrive at the liberating experience of faith in the risen Jesus. Jesus invites Thomas to follow the search path through his doubt; and being docile to Jesus' order ('Put your finger here; look, here are my hands. Give me your hand; put it into my side…') reaches a clear and convincing act of faith: "My Lord and my God!" The corresponding beatitude which Jesus proclaims ('Happy are those who have not seen and yet believe') is addressed to us who, following a journey of faith, in an attitude of complete abandonment, arrive at the risen Christ. Having been established on Christ, we become 'citizens like all the saints and part of God's household.' Put differently, when our doubts wrestle with our faith and lead us to believe firmly in Christ, we become 'part of a building that has the apostles and prophets for its foundations and Christ Jesus himself for its main cornerstone.'

Hence, doubt is important because it helps you to challenge the status quo, face and overcome your fears, redefine the situation you once believed to believe more, reflect on previous stories you've told yourself and search for the silver lining, ask new questions, and to search for new answers. Likewise, Thomas' answer to his doubt was a result of his disposition to contemplate the open side and the Heart of Jesus, resulting in his profound expression of faith: "My Lord and my God!"

Thomas doubted, but he decided to move from doubt to faith,

from scepticism to trust, and from fear to the courage of giving up his life in martyrdom for what he had come to believe. May this very contemplation of the most expressive sign of our Saviour's love lead us to a clear, determined, strong, and apostolic faith!

On 28 July, we celebrate the feast of St Alphonsa. Pope Benedict XVI, during his homily at her canonization, recalled Saint Alphonsa's life as one of extreme physical and spiritual suffering. He said, "This exceptional woman... was convinced that her cross was the very means of reaching the heavenly banquet prepared for her by the Father. By accepting the invitation to the wedding feast and by adorning herself with the garment of God's grace through prayer and penance, she conformed her life to Christ's and now delights in the 'rich fare and choice wines' of the heavenly kingdom. Her heroic virtues of patience, fortitude, and perseverance amid deep suffering remind us that God always provides the strength we need to overcome every trial." As we are preparing to celebrate the feast of St Alphonsa, let us emulate some of the important virtues that she excelled in her attitude towards suffering and her life of prayer. In order to prepare for this great feast and for our annual pilgrimage to the St Alponsa Shrine at Nagarcoil, let's all begin a prayer campaign with nine days novena prayers and acts of charity. The pilgrimage on foot, forane wise Holy Qurbana and finally the participation all our faithful as a diocese on the concluding day will bring more blessing from above. May St Alphonsa intercede for each one of us! May she pray for our church, which is going through many trials and difficulties!

With my prayers and blessings,

Yours in Christ Jesus,

☦ George Rajendran SDB

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

Bishop of Thuckalay

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile:+919443281100
Email :bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12,Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: diocesethuckalay@gmail.com

Prot. No.: **ETKLY/SUSP/06/2023**

**DECREE OF SUSPENSION**

**FR. THOMAS JEBANESH** from the parish of St. Joseph's Forane Church, Soosaipuram, Eparchy of Thuckaly, born on 21 July 1991 and ordained on 07 April 2018 for the Eparchy of Thuckalay is hereby suspended as per CCEO canon 1453 §1 from the exercise of Sacred Ministry including the administration of the Sacraments and Sacramentals.

It is further decreed that he shall not be admitted anywhere for discharging of any priestly ministry either inside or outside of the Eparchy of Thuckalay until further orders to the contrary.

Hereby he has no right to receive any favour as a priest from the Eparchy of Thuckalay and he is self-responsible for every act that he does during this period.

Given from the Bishop's Office on 03 July 2023.

**† George Rajendran SDB**
Bishop of Thuckalay

BISHOP GEORGE RAJENDRAN sdb * Diocese of Thuckalay *

Fr. Joshy Kulathumkal
Chancellor




"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."
(மாற் 16:15)

*"நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகாய் இருக்கின்றன".*
*[உரோமையர் 10:15]*

அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துக்கள்!

## மறைவட்ட இயக்குநர்கள் செயலர்கள் ஊக்குவிப்பாளர்களின் கூட்டம்

2023 -2024 ஆம் ஆண்டு செயல்படுத்த வேண்டிய செயல் திட்டங்கள் பற்றி கலந்துரையாடவும் தேவையான ஆலோசனைகள் வழங்கவும் மறைவட்ட இயக்குநர்கள், செயலர்கள் மற்றும் ஊக்குவிப்பாளர்களின் கூட்டமானது 2023 ஜூன் 03 சனிக்கிழமை, பிற்பகல் 2.00 மணி முதல் 5.00 மணி வரை கல்லுவிளை நற்செய்தி நிலையத்தில் நடைபெற்றது. இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் அவர்களின் தலைமையில் செபத்துடன் கூட்டம் ஆரம்பமானது. கூட்டத்தில் அருட்தந்தை அபிலாஷ் அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார். தொடர்ந்து இந்த வருடம் செயல்படுத்த வேண்டிய செயல் திட்டங்கள் முன் வைத்து கலந்துரையாடல் நடைபெற்றது.



## தலைமையாசிரியர்களின் கூட்டம்

மறைக்கல்வி தலைமையாசிரியர்களின் கூட்டம் 2023 ஜூன் 24 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லுவிளை நற்செய்தி நிலைய அலுவலகத்தில் நடைபெற்றது. இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் அவர்களின் தலைமையில் தூய ஆவிப்பாடலுடன் ஆரம்பமானது. இயக்குநர் தந்தை அவர்கள் இந்த வருடம் நடக்க வேண்டிய செயல் திட்டங்கள் பற்றியும் இந்த வருடம் வெளியிடப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கான கையேடு, மாணவர்கள் மற்றும்



ஆசிரியர்களுக்கான பதிவேடு பற்றி எடுத்துக்கூறினார். மேலும் மறைமாவட்ட அளவில் நடைபெற்ற விவிலிய வினாடிவினாப் போட்டி, 10, 11, 12 வகுப்புத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களின் பெயர் வாசிக்கப்பட்டது. மறைக்கல்வி ஆண்டுவிழா ஜூலை 16 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கல்லுவிளை ஆசீர் அரங்கில் வைத்து நடைபெறும் என்றும் ஒரு பங்கிலிருந்து 10 மாணவர்களும், 5 ஆசிரியர்களும் பங்கு பெற வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. இறுதியில் நன்றியுரை மற்றும் செபத்துடன் இக்கூட்டம் 4.30 மணியளவில் இனிதே முடிவடைந்தது. அனைவருக்கும் தேனீர் வழங்கப்பட்டது.

*அருட்தந்தை. ஜேக்கப் ஐயம்மாத்ற*
*இணை இயக்குநர்*

*அருட்தந்தை.அபிலாஷ் சேவியர்*
*இயக்குநர்*

................................................................

| BIRTHDAY OF REV. FATHERS - JULY - 2023 | |
|---|---|
| Fr. Kurian Mathew Koipuram | 21 |
| Fr. Michael Arokiaswamy SDB | 26 |

HOLY CHILDHOOD குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

***பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படியுங்கள். ஆண்டவரின் அடியாருக்கு இதுவே ஏற்புடையது. [எபேசியர் 6 : 1]***

தக்கலை மறைமாவட்ட 2023 - 2024 ஆம் ஆண்டின் குழந்தை ஈசோ இயக்கத்தின் துவக்க விழா 2023 ஜூன் 11, ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி அளவில் கல்லுவிளை KKSSS அரங்கத்தில் நடைபெற்றது. தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில் அவர்கள் தலைமையேற்று குத்து விளக்கு ஏற்றி, துவக்கவுரை ஆற்றினார். தக்கலை மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்தந்தை அபிலாஷ் சேவியர் ராஜ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். குழந்தை ஈசோ இயக்குநர் அருட்தந்தை டோஜி கொழுவக்கண்டத்தில் அவர்கள் இவ்வாண்டின் செயல் திட்டங்களை எடுத்துரைத்தார். அருட்சகோதரி அமல் பிளஸ்ஸி அவர்கள் Icon of the year - Little Nellie of Holy God ன் வாழ்க்கை குறிப்புகளை எடுத்துரைத்தார்கள். புதிதாக மறைவட்ட ஊக்குவிப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இடையிடையே குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. துவக்க விழாவின் அனைத்து நிகழ்வுகளையும் குழந்தைகளே சிறப்புற தொகுத்து வழங்கினார்கள். இறுதியில் அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது.



ஜூன் 18 அன்று மறைமாவட்டத்திலுள்ள அனைத்து ஆலயங்களிலும் பங்களவில் குழந்தை ஈசோ இயக்கம் சிறப்பு காணிக்கை பிரிக்கப்பட்டு குத்துவிளக்கேற்றி ஜெபத்துடனும் பங்குதந்தையர்களின் ஆசீர்வாதத்துடனும் 2023 - 2024 ஆம் ஆண்டு செயல்பாடுகள் இனிதே தொடங்கப்பட்டது

***அருட்தந்தை டோஜி கொழுவகண்டத்தில்***
***இயக்குநர்***

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

சீரோ மலபார் இளையோர் இயக்கம் **SMYM**

## நடுவண் செயற்குழு மற்றும் தியான பொறுப்பாளர்கள் கூட்டம்

தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் நடுவண் செயற்குழு கூட்டம் 2023 ஜூன் 08 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் கல்லுவிளை SMYM அலுவலகத்தில் நடைபெற்றது. மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் தலைமை தாங்கினார். சூசைபுரம் மறைவட்ட ஊக்குவிப்பாளர் அருட்சகோதரி டீனா SABS அவர்கள் செபம் செய்தார்கள். தொடர்ந்து சூசைபுரம் அல்போன்சா கல்லூரியில் நடைபெறவுள்ள தியானத்திற்காக பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டது. மதியம் 1.00 மணியளவில் கூட்டம் நிறைவு பெற்றது.

## இளையோர் தியானம்: மஞ்சாலுமூடு மறைவட்ட தயாரிப்புக் கூட்டம்

மஞ்சாலுமூடு மறைவட்ட இளையோர் தியான தயாரிப்பு கூட்டமானது, 2023 ஜூன் 04 ஞாயிற்றுக்கிழமை மதியம் 2.00 மணியளவில் முக்கூட்டுக்கல், திருக்குடும்ப ஆலய வளாகத்தில் நடைபெற்றது. மஞ்சாலுமூடு மறைவட்ட SMYM இயக்குநர் அருட்தந்தை ரோபின் ஜோஸ் தலைமை தாங்கினார். முக்கூட்டுக்கல் ஆலய இளையோர்கள் இறைவணக்க பாடல் பாடினர். நிவின் அனைவரையும் வரவேற்றுப்பேசினார். மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை. ஜோசப் சந்தோஷ் அவர்கள் சூசைபுரம் புனித அல்போன்சா கல்லூரியில் நடைபெறவிருக்கின்ற இளையோர் தியானம் குறித்து கலந்துரையாடினார்.



மறைமாவட்ட நடுவண் செயற்குழு உறுப்பினர்கள் இளையோர் தியானம் பற்றி எடுத்து கூறி, இதில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. மறைமாவட்ட செயலர் மெரின் சுஜித் அனைவருக்கும் நன்றி கூறினார். இயக்க கீதத்துடன் கூட்டம் நிறைவுப் பெற்றது.

## களியல் மறைவட்ட இளையோர் சந்திப்பு மற்றும் பொறுப்பாளர்கள் தேர்தல்

களியல் மறைவட்ட இளையோர் சந்திப்பு, 2023 ஜூன் 11 ஞாயிற்றுக்கிழமை மதியம் 2.00 மணியளவில் களியல், புனித மரியன்னை உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. களியல் மறைவட்ட முதன்மை பணியாளர் பேரருட்தந்தை தோமஸ் தெக்கேத்தல CMI தலைமை தாங்கினார். களியல் ஆலய இளையோர்கள் இறைவணக்க பாடல் பாடினர். சேனங்கோடு SMYM உறுப்பினர் சஜித் அனைவரையும் வரவேற்றுப்பேசினார். களியல் மறைவட்ட SMYM இயக்குநர் அருட்தந்தை ஜெஸ்டின் சுதீஷ் அவர்கள் தொடக்கவுரை வழங்கினார். பேரருட்தந்தை தோமஸ் தெக்கத்தல CMI அவர்கள் சிறப்புரை வழங்கினார். முஞ்சிறை SMYM உறுப்பினர் மனோஜ் மகிழ்ச்சியாக வாழ்வதைக்குறித்து கலகலப்பான முறையில் விவாதம் நடத்தினார். தொடர்ந்து மறைவட்ட பொறுப்பாளர்களுக்கான தேர்தல் நடைபெற்றது. மறைமாவட்ட தலைவர் மெர்பின் தலைமைத்துவம் பற்றியும், தலைவர்களுக்கான பண்புகள் பற்றியும் எடுத்துக்கூறினார். பின்னர் நடைபெற்ற தேர்தலில் பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

| | **பதவி** | **பெயர்** | **அலகு** |
|---|---|---|---|
| 1 | தலைவர் | டோனி | களியல் |
| 2 | இணைத்தலைவர் | மோனிஷா | மாறப்பாடி |
| 3 | துணைத்தலைவர் | ஆஷிகா | சேனங்கோடு |
| 4 | செயலர் | அபிஷா | களியல் |
| 5 | துணைச்செயலர் | ரெஞ்சு | பள்ளிக்கோணம் |
| 6 | பொருளர் | அகில் | காரோடு |

மறைமாவட்ட SMYM செயலர் மெரின் சுஜித் புதிய பொறுப்பாளர்களுக்கு வாழ்த்துக்களும் பழைய பொறுப்பாளர்களுக்கு நன்றியும் கூறினார். மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை. ஜோசப் சந்தோஷ்

அவர்கள் சூசைபுரம் புனித அல்போன்சா கல்லூரியில் நடைபெறவிருக்கின்ற இளையோர் தியானம் குறித்து கலந்துரையாடினார். மறைமாவட்ட நடுவண் செயற்குழு உறுப்பினர்கள் இளையோர் தியானம் பற்றி எடுத்து கூறி, இதில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. பள்ளிக்கோணம் SMYM உறுப்பினர் தினேஷ் அனைவருக்கும் நன்றி கூறினார். இயக்க கீதத்துடன் கூட்டம் நிறைவு பெற்றது.



**மறைமாவட்ட இளையோர் தியானம்**

தக்கலை மறைமாவட்ட இளையோர் தியானம் ஜூன் 16,17,18 வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் சூசைபுரம், புனித அல்போன்சா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. ஜூன் 16 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் நிகழ்வுகள் ஆரம்பமானது. களியல் SMYM உறுப்பினர்கள் இறைவணக்கம் பாடினர். மறைமாவட்ட செயலர் மெரின் சுஜித் வரவேற்புரை வழங்கினார். சூசைபுரம் மறைவட்ட முதன்மை பணியாளர் பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் தொடக்கவுரை வழங்கினார். தொடர்ந்து தியான நிகழ்வுகள் நடைபெற்றது. ஜூன் 17 சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில் அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார். மதியம் 2.00 மணியளவில் ஒப்புரவு அருளடையாளம் நடைபெற்றது. தொடர்ந்து மறைமாவட்ட ஆயர் மேதகு மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் கலந்து கொண்டு இளையோர்களோடு



கலந்துரையாடினார். குருமடத்தில் சேர்நதுள்ள மறைமாவட்ட தலைவர் மெர்பின் அவர்களுக்கு பாராட்டுக்களும், நினைவுப்பரிசும் வழங்கப்பட்டது. ஜூன் 18 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் நிகழ்வுகள் நிறைவுபெற்றன. மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில் அவர்கள் நிறைவுரை வழங்கினார். மறைமாவட்ட SMYM இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தியானத்தில் நாம் பெற்றுக்கொண்ட அனுபவத்தை எவ்வாறு செயல்படுத்த வேண்டும் என்று எடுத்துக்கூறினார். அருட்சகோதரி அமலா FCC அவர்கள் சிறப்புரை வழங்கினார். இறுதியில் சூசைபுரம் மறைவட்ட SMYM செயலர் ஜெசிலா மேரி அனைவருக்கும் நன்றி கூறினார். இயக்க கீதத்துடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றது. சகோதரர் அன்றணி தலைமையிலான சாலக்குடி டிவையின் தியான இல்ல குழுவினர் நிகழ்வுகளை வழிநடத்தினர். மறைமாவட்ட இயக்குநர் மற்றும் நடுவண் செயற்குழு உறுப்பினர்கள் ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

**அலகு சந்திப்பு – படந்தாலுமூடு மறைவட்டம்**

படந்தாலுமூடு மறைவட்ட பொறுப்பாளர்கள், தங்களது மறைவட்டத்தில் உள்ள அலகுகளை பார்வையிட்டு வருகின்றனர். அதன்படி 2023 ஜூன் 4 மற்றும் 11 ஆகிய நாட்களில் முறையே அதங்கோடு மற்றும் அன்னிக்கரை பங்குகளில் அலகு சந்திப்பு நடைபெற்றது.

**அலகு சந்திப்பு – தக்கலை பிலாங்காலை மறைவட்டம்**

தக்கலை - பிலாங்காலை மறைவட்ட செயற்குழு உறுப்பினர்கள் தற்போது மறைவட்டத்தில் அனைத்து பங்குகளையும் பார்வையிட்டு வருகின்றனர். ஞாயிற்றுக்கிழமைகளில் இளயோர்களுடன் இணைந்து திருப்பலியில் பங்கேற்று அலகு சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. அதன்படி, 04.06.2023 அன்று பரைக்கோடு ஆலயத்தில் அலகு சந்திப்பு நடைபெற்றது.

***இவண்***

***மெரின் சுஜித், செயலர்***




## இல்வாழ்வு இயக்கம்

மனநோய் மற்றும் குடிநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவர் றோபின் அவர்களின் ஆலோசனைப்படி மருந்துகள் வழங்கப்பட்டு வருகிறது. இம்மாதத்தில் மட்டும் சுமார் 36 நோயாளிகள் பயன் அடைந்து உள்ளனர்.

## மாதர் ஜோதிஸ் இயக்கம்

2023 - 2024 ஆண்டு தொடக்க விழா 2023 ஜீன் 10, கல்லுவிளை KKSSS அலுவலக அரங்கில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றது. தக்கலை மறைமாவட்ட ஆயர் மேதகு மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB, அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி விழாவை தொடங்கி வைத்தார்கள். அன்றைய தினம் இயக்கத்தின் தாய்மார்களின் பல கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. ஆயர் அவர்கள் தனது வாழ்த்துரையில் "தாய்மார்கள் குடும்பத்தின் ஒளி என்றும் அவர்கள் தங்கள் குழந்தைகளை திருச்சபை பணியில் ஈடுபடுத்தி வளர்த்த வேண்டும்" எனவும் கூறினார். இயக்கத்தை வளர்ச்சிப்பாதையில் கொண்டு





செல்லும் இயக்குநர் தந்தை, இணை இயக்குநர் மற்றும் மாதர் ஜோதிஸ் மறைமாவட்ட தலைவருக்கும் பாராட்டுகளைத் தெரிவித்தார். தொடர்ந்து 2023 - 2024 ஆண்டிற்கான TASK ஆயர் அவர்களால் வெளியிடப்பட்டது. இல்வாழ்வு இயக்குநர் அவர்கள் "பெண்கள் நமது அன்னை மரியாளே போன்று குடும்பத்தை வழிநடத்த வேண்டும்" என்று கூறினார். மாதர் ஜோதிஸ் மறைமாவட்ட தலைவர் திருமதி ஜீலிட் சுனில் அவர்கள் 2023 - 2024 ம் ஆண்டின் போட்டிகள் குறித்து எடுத்துக்கூறினார். மாலை 4.00 மணியளவில் மாதர் ஜோதிஸ் கீதத்துடன் விழா இனிதே நிறைவுற்றது.

**மார்கம்களிப்போட்டி**

மாதர் ஜோதிஸ் தாய்மார்களுக்கு மறைமாவட்ட அளவில் மார்கம்களிப் போட்டி ஜீலை 29 ம் தேதி சனிக்கிழமை கல்லுவிளையில் வைத்து நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**திருமண ஆயத்தப் பயிற்சி**

திருமண ஆயத்தப் பயிற்சி வகுப்பானது ஜூன் 17 ம் தேதி கல்லுவிளை இல்வாழ்வு இயக்கத்தில் வைத்து நடைபெற்றது. அடுத்த திருமண ஆயத்தப் பயிற்சி வகுப்பானது வருகின்ற ஜீலை மாதம் 7 மற்றும் 8 தேதிகளில் கல்லுவிளை இல்வாழ்வு இயக்கத்தில் வைத்து நடத்தப்படவுள்ளது. மறைமாவட்ட அளவில் திருமண நிதி உதவி திட்டத்தின் அடிப்படையில் ரூபாய் 6000 புனித தோமையார் ஆலயம் மாறப்பாடி பங்கை சார்ந்த நபருக்கு வழங்கப்பட்டது.



*அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்*
*இயக்குநர்*

# அருட்சகோதரர்களிடமிருந்து

**ஈசோ மெசியாவில் அன்பார்ந்தவர்களே**

ஜூன் மாதம் 16 ஆம் தேதி சென்னை பூந்தமல்லி திருஇருதய குருத்துவ கல்லூரியில் திருஇருதய ஆண்டவரின் விழாவானது கொண்டாடப்பட்டது. அங்கு பயிலும் நமது அருட்சகோதரர்கள் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கோட்டயம் புனித தோமையார் குருத்துவக்கல்லூரியில் திருஇருதய ஆண்டவரின் விழாவை முன்னிட்டு ஜூன் 16 வெள்ளிக்கிழமை ஒருநாள் ஆராதனை நடைபெற்றது. உரோமையில் பயிலும் அருட்சகோதரர் ஜூபின் தேர்வுகள் முடிந்து பங்கு இறைபணிக்காக ஒரு ஆலயத்திற்கு சென்றுள்ளார். ஜூன் மாதம் தங்கள் பெயர்கொண்ட திருவிழாவை கொண்டாடிய அனைத்து அருட்சகோதரர்களுக்கும் வாழ்த்துக்கள். தொடர்ந்து எங்களுக்காக ஜெபியுங்கள். உங்கள் அனைவருக்கும் நன்றியும் துக்ரான திருநாள் நல்வாழ்த்துக்களும்.

***சகோ. சுனில் ஆன்றணி***

---

## *புனித மரியன்னை இளங்குருமடம் முக்கூட்டுகல்*

**நான்காம் ஆண்டு பயிலும் அருட்சகோதரர்கள் 2023 ஜூன் 2 முதல் 7 வரை தென்காசி மறைபரப்புதளத்தில் அமைந்துள்ள அன்பு இல்லத்தில் சென்று அனுபவம் பெற்றனர்.**

**இளம்குருமடம் அதன் வெள்ளி விழா கொண்டாடுவதால் கல்வியாண்டு மற்றும் ஜூபிலி தொடக்க விழா 2023 ஜூன் 24 அன்று நடைபெற்றது. ஆயர் அவர்கள் தலைமை தாங்கி சிறப்பித்தார்கள். சிறப்பு விருந்தினராக அருட்தந்தை மேத்யூ ஆரேக்குளம் அவர்கள் வருகை தந்து சிறப்பித்தார்கள்.**

**ஆன்மீக வளர்ச்சிக்கும் வழிகாட்டுதலுக்குமாக கருத்தரங்கு மற்றும் தியானம் ஜூன் 25 அன்று நடைபெற்றது. இக்கருத்தரங்கில் அருட்சகோதரர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.**

# புலரி சமூக சேவை சங்கம்
## தென்காசி மறைபரப்புதளம்

**உலக சுற்றுசூழல் தின விழா**

தென்காசி மறைபரப்பு தள, புலரி சமூக சேவை சங்கத்தின் சார்பாக பிரானூர் பார்டர் புலரி சமூக சேவை சங்க அலுவலகத்தில் ஜூன் 10 ஆம் நாள் சுற்று சூழல் விழா கொண்டாடப்பட்டது. விழாவிற்கு கொட்டாகுளம் ஊராட்சித்தலைவர் திரு.அருணாச்சலம் அவர்கள் தலைமை தாங்கினார். மாவட்ட சமூக நல அலுவலர் செல்வி. மதிவதனா அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார். தென்காசி திருத்தொண்டு தள ஒருங்கிணைப்பாளர் அருட்பணி. டென்சி அவர்கள் முன்னிலை வகித்தார். புலரி சமூக சேவை இயக்குநர் அருட்பணி. மகேஷ் அவர்கள் நிகழ்வை ஒருங்கிணைத்தார். நிகழ்வின் போது புலரி அலுவலக வளாகத்தில் ஒரு மரக்கன்று நடப்பட்டதோடு கலந்து கொண்ட 100 நபர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. விழாவில் இயற்கையை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் புலரி தன்னார்வ மாணவ மாணவியரின் கலை நிகழ்சிகளும் இடம் பெற்றன. புலரியின் அலுவலகப் பணியாளர்கள் அருட் சகோதரி அல்போன்சா, திருமதி. அனு கிறிஸ்டி மற்றும் தன்னார்வலர்கள் செல்வன். இராமகிருஷ்ணன், செல்வன். பிரதின் ஆகியோர் விழாவை முன்னின்று நடத்தினர்.



**புலரி மாலை நேர வகுப்புகள்**

கிராமப்புற ஏழை எளிய மாணவர்களின் கற்றல் தரத்தை உயர்த்த புலரி சமூகசேவை சங்கம் வாயிலாக மாலை நேர வகுப்புகள் நடைபெற்று வருகிறது. இந்த கல்வி ஆண்டிற்கான வகுப்புகள் ஜூன் 10 ஆம் நாள் தொடங்கப்பட்டது. VI வகுப்பிலிருந்து XII வகுப்பு வரை ஏறக்குறைய 30 மாணவ மாணவியர் இதன் மூலம் பயன் பெற்று வருகிறார்கள். தினமும் மாலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை நடைபெறுகிறது. வகுப்புகளை அருட்பணி. மகேஷ் அவர்கள் வழிகாட்டுதலில் SMYM உறுப்பினர்கள் ஒருங்கிணைத்து நடத்துகிறார்கள்.

***அருட் சகோதரி அல்போன்சா***
***அலுவலகப் பணியாளர்***

---

# வரவிருக்கும் நிகழ்வுகள்

| | |
|---|---|
| பளுகல் புனித தோமையார் ஆலய அர்ச்சிப்பு | - ஜூலை 01 |
| புனித சாவறா ஆலய இடமாற்றம், அரியூர், மதுரை | - ஜூலை 02 |
| புனித தோமையார் திருநாள் | - ஜூலை 03 |
| அருட்தந்தையர்கள் கூட்டம், முக்கூட்டுக்கல் (ஆறுகாணி, களியல், மஞ்சாலுமூடு மறைவட்டம்) | - ஜூலை 11 |
| அருட்தந்தையர்கள் கூட்டம், முஞ்சிறை (நித்திரவிளை, படந்தாலுமூடு மறைவட்டம்) | - ஜூலை 13 |
| அருட்தந்தையர்கள் கூட்டம், கன்னியாகுமரி (சூசைபுரம், தக்கலை – பிலாங்காலை மறைவட்டம்) | - ஜூலை 13 |
| மறைக்கல்வி ஆண்டுவிழா, கல்லுவிளை | - ஜூலை 16 |
| இளங்குருக்கள் உருவாக்கல் பயிற்சி | - ஜூலை 17 – 18 |
| புனித அல்போன்சா திருத்தல நடைபயணம் | - ஜூலை 22 |
| புனித அல்போன்சா திருநாள் | - ஜூலை 28 |
| மறைமாவட்ட அளவில் அல்போன்சா திருவிழா கொண்டாட்டம் | - ஜூலை 30 |

# மறைமாவட்டச் செய்திகள்

## மதுரை திருத்தொண்டுதள சந்திப்பு

மதுரை திருத்தொண்டு தள சந்திப்பு 2023 ஜூன் 1 முதல் 5 ம் தேதி வரை நடைபெற்றது. மறைமாவட்ட ஆவணக்காப்பாளர் மற்றும் பொருளாளர் தந்தையர்களால் ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டது. ஆயர் அவர்கள் ஒவ்வொரு குடும்பங்களையும் சந்தித்து கலந்துரையாடினார். தொடர்ந்து ஜூன் 4 ஞாயிற்றுக்கிழமை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB தலைமையில் ஆடம்பரத்திருப்பலி நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை அருட்தந்தை பாபு தட்டில் CMI அவர்கள் சிறப்பாகச் செய்திருந்தார்.

## புதிய அருட்தந்தையர்களுகானத் திருப்பலி

தக்கலை மறைமாவட்டத்தில் புதிதாக அருட்பொழிவு பெற்ற அருட்தந்தையர்களை வரவேற்கும் விதமாக தக்கலை ஆயர் இல்ல புனித மரியன்னை ஆலயத்தில் திருப்பலி மற்றும் வாழ்த்துக்கூட்டம் நடைபெற்றது. அருட்தந்தை பிரின்ஸ் செரிப்பநாட்டு திருப்பலி தலைமை தாங்கினார். அருட்தந்தை ஜார்ஜ் கண்டத்தில் மறையுரை வழங்கினார். அருட்தந்தை அஜின் C ஜோசப் நன்றி கூறினார். பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் வாழ்த்துரை வழங்கினார். தக்கலை பிலாங்காலை மறைவட்டத்தைச் சார்ந்த அருட்தந்தையர்கள் மற்றும் அருட்கன்னியர்கள் கலந்து கொண்டனர்.

## சிறப்பு ஆயர் மாமன்றம்

சீரோ மலபார் ஆயர் மாமன்றம் 2023 ஜூன் 12 முதல் 16 வரை காக்கநாடு St.தாமஸ் மவுண்ட் ல் நடைபெற்றது. தக்கலை மறைமாட்டத்தின் சார்பாக ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவரகள் கலந்து கொண்டார்.

## இளங்குருமட அதிபர் பதவியேற்பு

2023 ஜூன் 17 அன்று முக்கூட்டுக்கல், புனித மரியன்னை இளங்குருமட புதிய அதிபராக அருட்தந்தை ஐசக் புன்னூர் CMI அவர்கள் பதவியேற்றுக்கொண்டார். மதியம் 2.30 மணியளவில் ஆயர் மார் ஜாரஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மறைமாவட்ட ஆவணக்காப்பாளர் பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் நியமன ஆணை வாசித்தார். CMI மகாணத்தலைவர் பேரருட்தந்தை

மாத்யூ ஆரக்குளம் CMI அவர்கள் முன்னிலை வகித்தார். மஞ்சாலுமூடு மறைவட்ட அருட்தந்தையர்கள், மறைமாவட்டத்தில் பணிபுரியும் CMI அருட்தந்தையர்கள் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

### அருட்தந்தையர்களுக்கான கூட்டம்

2023 ஜூன் 20 அன்று அருட்தந்தையர்கள் கூட்டம் தக்கலை சங்கமத்தில் நடைபெற்றது. காலை 9.30 மணிக்கு ஆராதனையுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது. தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் தக்கலை மறைமாவட்டத்தில் புதிதாக இணைந்துள்ள அருட்தந்தை மாத்யூ ஆரக்குளம் CMI, அருட்தந்தை ஐசக் புன்னூர் CMI மற்றும் அருட்தந்தை ஜோஷி தேவரக்கர CMI ஆகியோருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. நடந்து முடிந்த ஆயர் மாமன்றம் குறித்து விவாதிக்கப்பட்டது.

### இளங்குருமட வெள்ளிவிழா துவக்கம்

முக்கூட்டுக்கல், புனித மரியன்னை இளங்குருமட புதிய கல்வியாண்டு தொடக்கவிழா மற்றும் வெள்ளிவிழாவின் துவக்கம் 2023 ஜூன் 24 திருப்பலியுடன் ஆரம்பமானது. தொடர்ந்து மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் குத்துவிளக்கேற்றி நிகழ்வை துவக்கி வைத்தார். CMI மகாணத்தலைவர் அருட்தந்தை மாத்யூ ஆரக்குளம் CMI அவர்கள் முன்னிலை வகித்தார். வெள்ளிவிழா சின்னம் வெளியிடப்பட்டது. தொடர்ந்து மதியம் 1.30 மணியளவில் நிகழ்வுகள் நிறைவு பெற்றது.

### கைக்காரர்கள் மற்றும் கணக்கர்களுக்கான பயிற்சி

தக்கலை மறைமாவட்டத்தின் கீழ் செயல்படும் பங்குகளில் பணியாற்றும் கணக்கர்கள் மற்றும் கைக்காரர்களுக்கான பயிற்சி 2023 ஜூன் 25 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை தக்கலை சங்கமத்தில் நடைபெற்றது. மறைமாவட்ட ஆயர் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி நிகழ்வை தொடங்கி வைத்தார். தொடர்ந்து நடைபெற்ற பயிற்சி வகுப்புகளை பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் மற்றும் பேரருட்தந்தை ஜோண்சிலால் அரக்கப்பறம்பில் ஆகியோர் வழிநடத்தினர். இதில் பல்வேறு ஆலயங்களை சார்ந்த 85 பேர் கலந்து கொண்டனர்.

# இதர செய்திகள்

- ஷம்ஷபாத் மறைமாவட்ட துணை ஆயர் மார் தாமஸ் பதியாத் மற்றும் 20 சகோதரர்கள் 2023 ஜூன் 7 அன்று நமது மறைமாவட்டத்தை பார்வையிட்டனர்.
- அருட்சகோதரி ஹெலன்சி DSH அவர்களின் தாய் திருமதி. ரீத்தம்மா அவர்கள் 2023 ஜூன் 8 அன்று இறைவனடி சேர்ந்தார்கள். அவர்களது ஆன்மா நித்திய இளைப்பாறுதல் பெற இறைவனை வேண்டிக்கொள்கிறோம்.
- அருட்சகோதரி ஆன் மரியா FCC அவர்களின் தந்தை திரு. ஜோசப் அவர்கள் 2023 ஜூன் 12 அன்று இறைவனடி சேர்ந்தார்கள். அவர்களது ஆன்மா நித்திய இளைப்பாறுதல் பெற இறைவனை வேண்டிக்கொள்கிறோம்.
- முக்கூட்டுக்கல் இளங்குருமடத்தில் இவ்வருடம் புதிதாக 7 சகோதரர்கள் தங்கள் முதல் வருட படிப்பை தொடங்கியுள்ளனர்.
- அருட்தந்தை பிரிண்டோ, அருட்தந்தை ஜோஸ் வயலில், அருட்தந்தை சுமேஷ் மற்றும் அருட்தந்தை சாஜன் ஆகியோர் காக்கநாட்டில் ஜூன் 12 முதல் 21 வரை நடைபெற்ற உருவாக்கப்பயிற்சியில் கலந்து கொண்டனர்.
- சென்பகத்தரிசு திருத்தொண்டு நிலையகட்டிடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டுவிழா 2023 ஜூன் 25 அன்று நடைபெற்றது.
- மதுரை புனித சாவறா திருத்தொண்டு தள பங்குதந்தை அருட்தந்தை பாபு தட்டில் CMI அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளார். அருட்தந்தை ஜோகேஷ் போளச்சிறா புதிய பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்டுள்ளார்.

# மறைவட்டச் செய்திகள்

## படந்தாலுமூடு

### திருஇருதய மறைவட்ட ஆலயம் – படந்தாலுமூடு

திருவிழாவிற்கு இறைமக்களைத் தயாரிக்கும் விதமாக மூன்று நாள் நற்செய்திப் பெருவிழா 2.6.2023 முதல் 4.6.2023 வரை நடைபெற்றது. படந்தாலுமூடு திருஇருதய மறைவட்ட ஆலயத் திருவிழா, 2023 ஜூன் 9 ஆம் தேதி வெள்ளிக்கிழமை முதல் 18 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை வரை 10 நாட்கள் நடைபெற்றது. முதல் நாள் மாலை 5.30 மணியளவில் பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்கள் திருக்கொடியேற்றினார். தொடர்ந்து ஒவ்வொரு நாளும் மாலை 5:30 மணிக்கு செபமாலையும், திருஇருதய நவநாள் செபமும், மாலை 6:15 மணிக்கு ஆடம்பரத் திருப்பலியும் நடைபெற்றது. மூன்றாம் நாள் திருவிழாத்திருப்பலி காலை 9.00 மணிக்கு மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களால் நிறைவேற்றப்பட்டது. திருமுழுக்கு, புதுநன்மை, உறுதிபூசுதல் அருளடையாளங்கள் வழங்கப்பட்டன. கடைசி நாளன்று ஆடம்பர இராசை திருப்பலியும் தொடர்ந்து திருக்கொடி இறக்குதல் மற்றும் அன்பின் விருந்து ஆகியவை நடைபெற்றன.



### புனித மார்டின் டி போரஸ் ஆலயம் – கழுவந்திட்டை

பங்கு தந்தையர் இல்லம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா 29.6.2023 அன்று மாலை 5.30 மணிக்கு மேதகு ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் முன்னிலையில் நடைபெற்றது. ஆலய பங்குதந்தை அரட்தந்தை ஜெஸ்டின் செறுவேலில் முன்னிலை வகித்தார்.

## தக்கலை – பிலாங்காலை

### புனித குழந்தை தெரசா மறைவட்ட ஆலயம் – பிலாங்காலை

ஜூன் மாதம் 10 ஆம் தேதி இரண்டாம் சனிக்கிழமை நோயாளிகளுக்கான சிறப்பு ஜூன் 10 அன்று திருப்பலியும் தொடர்ந்து 15 நிமிட ஆராதனையும் நடைபெற்றது. மறைக்கல்வி, மிஷன்லீக் மற்றும் குழந்தை ஈசோ இயக்கத்திற்கான தொடக்க விழாவும் நடைபெற்றது. திரு இருதய ஆண்டவர் திருவிழா திருப்பலி நடைபெற்றது. அனைத்தையும் பங்குதந்தை முன்னின்று நடத்தினார்.

## களியல்

### புனித மரியன்னை மறைவட்ட ஆலயம் – களியல்

ஜூன் 4 ஆம் தேதி திருப்பலிக்குப்பின், குத்துவிளக்கை ஏற்றி, ஆலய பங்குதந்தை பேரருட்தந்தை தோமஸ் தெக்கேதல CMI அவர்கள் புதிய மறைக்கல்வியின் ஆண்டினை துவக்கிவைத்தார். மறைக்கல்வி தலைமையாசிரியர் அருட்சகோதரி ஷெரின் CMC அவர்களும், ஒருங்கிணைப்பாளர் அருட்சகோதரர் ஜூபின் அவர்களும் கலந்துகொண்டனர்.

2023 ஜூன் 18 குழந்தை ஈசோ இயக்கம் தொடக்கவிழா திருப்பலிக்கு பின்பு மழலைகளின் அணிவகுப்போடு ஆரம்பமானது. அருட்தந்தை. டேவிஸ் கருகப்பள்ளி CMI அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார். அதில் அனைத்து குழந்தை ஈசோ இயக்க குழந்தைகளும் அதன் பொறுப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

### திரு இருதய ஆலயம் – பள்ளிக்கோணம்

திரு இருதய ஆண்டவர் திருநாளை முன்னிட்டு ஒரு வாரம் மாலை 6 மணிக்கு திருப்பலியும் அதைத் தொடர்ந்து அனைத்து நாட்களும் நவநாள் ஜெபங்கள் நடைபெற்றன. திருவிழாவை முன்னிட்டு மறைக்கள்ளி மாணவ மாணவிகளுக்கு போட்டிகள் நடைபெற்றன.

ஆலயத்திருவிழாவானது 2023 ஜூன் 4 தொடங்கி 18 அன்று நிறைவுற்றது. முதல் இரண்டு நாட்கள் திருப்பலியும் தொடர்ந்து நற்செய்தி பகிர்வும் நடைபெற்றது. மூன்றாம் நாள் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து பக்த இயக்கங்களின் ஆண்டு விழாவும் நடைபெற்றது. நான்காம்

நாள் காலை 10.30 மணிக்கு மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் தலைமையில் ஆடம்பர திருப்பலியும் புதுநன்மை வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது. ஐந்தாம் தாள் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து பவனியும் நடைபெற்றது. திருவிழா ஏற்பாடுகளை பங்குதந்தை அருட்சகோதரிகள் மற்றும் பங்கு மக்கள் செய்திருந்தனர்.

25.6.2023 அன்று, குழந்தை ஈசோ இயக்கத் துவக்க விழா நடைபெற்றது. திருப்பலிக்கு பின் பங்குதந்தை லூக்கா கொல்லம்பறம்பில் CMI அவர்கள் குத்துவிளக்கு ஏற்றினார். அதனைத் தொடர்ந்து அருட்சகோதரிகளும் பொறுப்பாளர்களும் குழந்தைகள் சார்பாகவும், ஒளியேற்றி புது வருட குழந்தை ஈசோ இயக்கம் தொடங்கப்பட்டது. குழந்தைகளை உற்சாகப்படுத்தும் வகையில் அவர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன அனைத்து ஏற்பாடுகளையும் அருட்சகோதரி தீபா CMC அவர்கள் செய்திருந்தார்.



### புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு

2023 ஜூன் 11 அன்று மறைக்கல்வி மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு பங்குதந்தை அருட்திரு ஜஸ்டின் சுதீஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. காணிக்கை பவனியும், தொடர்ந்து புதிய மாணவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டது.

அருட்தந்தை சிறியக் கூட்டுமேல் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு 2023 ஜூன் 25 ஞாயிற்றுக்கிழமை நினைவுத்திருப்பலி

நிறைவேற்றப்பட்டு ஒப்பீசு செபிக்கப்பட்டது. தொடர்ந்து அருட்தந்தை சிறியக் கூட்டுமேல் நினைவு கல்வி உதவித்திட்டத்தின் கீழ் ரூ. 6,000/- வீதம் 3 மாணவர்களுக்கு பங்குத்தந்தை அருட்திரு ஜஸ்டின் சுதீஷ் அவர்களால் வழங்கப்பட்டது.



## தூசைபுரம்

### கிறிஸ்து அரசர் ஆலயம் – பாலப்பள்ளம்

ஜூன் 3 தேதி உறவிய பொறுப்பாளர்களின் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது.

04.6.23 இல் மறைக்கல்வி வகுப்புகளின் தொடக்க விழா இனிதே நடைபெற்றது. சிறப்பு திருப்பலியும் பின்னர் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மெழுகுவர்த்தி ஏந்தி உறுதி மொழியை ஏற்றுக் கொண்டார்கள். சிறப்பு காணிக்கை பவனியும் நடைபெற்றது.

08.06.2023 இல் இயேசுவின் திருவுடல் திருஇரத்த திருநாள் காலை 6.30 மணிக்கு சிறப்பு திருப்பலி மற்றும் ஆராதனையுடன் நடைபெற்றது.

மாதம் தோறும் பங்கில் நடைபெறும் அரை நாள் தியானமானது 17.06.2023 இல் நடைபெற்றது.

25.06.23 ஞாயிற்றுக்கிழமை பங்கில் குழந்தை ஈசோ இயக்க தொடக்க விழா நடைபெற்றது. திருப்பலியும் சிறப்பு காணிக்கப்பவனியும் நடைபெற்றது.

### தூய தேவமாதா ஆலயம் – கிள்ளியூர்

18.06.2023 அன்று பங்கு அளவிலான குழந்தை ஈசோ இயக்க துவக்கவிழாவை அருட்தந்தை ஜேம்ஸ் கானாக்காலில் அவர்கள் குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார்கள்.

*19.06.2023* அன்று மின் விபத்தில் இறந்த L.அனிஷ் அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அருட்தந்தையர்கள் மற்றும் ஏராளமான பங்கு மக்கள் கலந்து கொண்டு உதவியும் செய்தார்கள்.

*25.06.2003* அன்று பங்குத்தத்தை சாஜன் நெட்டபெங்கு அவர்களின் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. தொடர்ந்து நடைபெற்ற திருவிழா ஆலோசனைக்கூட்டத்தில் இவ்வாண்டு திருவிழாவிற்கான பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமை சிறப்பு நற்கருணை பவனியும் மற்ற அனைத்து வெள்ளிக்கிழமைகளில் நற்கருணை ஆராதனையும் நடைபெற்று வருகிறது.

- **தூய பாத்திமா அன்னை ஆலயம் – பாத்திமாபுரம்**

தூய பாத்திமா அன்னை ஆலயத்தில் *13.6.2023*அன்று பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ் அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து பங்குதந்தையின் பெயர் கொண்ட திருவிழா மிகவும் சிறப்பாக கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது. பங்கின் சார்பாக பரிசு வழங்கப்பட்டது.



*18.6.23* அன்று பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. திருப்பலிக்கு பின் குழந்தை ஈசோ இயக்கம் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கிவைக்கப்பட்டது.

- **புனித வியாகப்பர் ஆலயம் – மாங்கரை**

*2023* ஜூன் *04* ம் தேதி மறைக்கல்வி தொடக்கவிழா நடைபெற்றது. காலை திருப்பலியும் தொடர்ந்து பங்குதந்தை தலைமையில் மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு சிறப்பு செபம் ஏறெடுக்கப்பட்டது.

*2023* ஜூன் *15* அன்று படுக்கை நோயாளிகளுக்கு, அவர்களின் வீடுகளில் சென்று நற்கருணை வழங்கப்பட்டது.

*18.06.2023* அன்று பங்களவில் குழந்தை ஈசோ இயக்கம் தொடங்கப்பட்டது. குழந்தைகளின் சிறப்பு காணிக்கை பவனியும், தொடர்ந்து பங்குதந்தை அருட்தந்தை டோஜி அவர்கள் தலைமையில் குத்துவிளக்கேற்றி இயக்கம் தொடங்கப்பட்டது.



## நித்திரவிளை

### கிறிஸ்து அரசர் ஆலயம்–கிறிஸ்துராஜபுரம்

*18* ம் தேதி குழந்தை ஈசோ இயக்கமும் மிஷன் லீக் இயக்கத்தின் புதிய கல்வியாண்டும் தொடங்கப்பட்டது.

25-ம் தேதி 'மரியாயின் சேனை இயக்கம்' பங்களவில் முதல் முறையாக தொடங்கப்பட்டது.



### புனித ஜார்ஜியார் திருத்தலம் – முஞ்சிறை

*01.06.2023* வியாழக்கிழமை காலை *6* மணி முதல் மாலை *6* மணி வரை தொடர் ஜெபமாலை உறவியம் வாயிலாக நடைபெற்றது. தொடர்ந்து *6* மணி முதல் திருப்பலியும் ஆடம்பர நற்கருணை வழிபாடும், குணமளிக்கும் ஆராதனையும், நற்கருணை பவனியும்

நடைபெற்றது. இறுதியில் அன்பின் விருந்து நடைபெற்றது.

ஜூன் 11-ம் தேதி மிஷன்லீக் இயக்கம் பங்களவில் உறுதிமொழியுடன் துவங்கப்பட்டது.

ஜூன் 18 ம் தேதி குழந்தை ஈசோ இயக்கம் பங்களவில் துவங்கப்பட்டது. எல்லா குழந்தைகளும் திருப்பலிக்கு முன் காணிக்கை பவனி சிறப்பித்தனர். திருப்பலி முடிந்தபின் அருட்தந்தை எல்லா குழந்தைகளின் தலையில் கை வைத்து செபித்து ஆசீர் வழங்கினார். அன்று குழந்தைகள் தினமாக கொண்டாடப்பட்டது.

## புனித அந்தோணியார் ஆலயம் – வயலங்கரை

ஜூன் மாதம் 11- ம் தேதி முதல் 18-ம் தேதி முடிய 8 நாட்கள் ஆலய திருவிழா நடைபெற்றது. உறவியங்களிலிருந்து பவனியாக வந்து கொடியேற்றி விழாவைத் துவக்கினர். 13-ம் தேதி பாதுகாவலர் விழாவும் முதல் திருவிருந்து வழங்குதலும் உறுதிப்பூசுதல் விழாவும் சிறப்பாக நடைபெற்றது. 18-ம் தேதி காலை 9.00 மணிக்கு பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் தலைமையில் இராசா திருப்பலி மற்றும் திருக்கொடியிறக்கத்துடன் விழா சிறப்பாக நடைபெற்றது.

ஜூன் 25-ம் தேதி குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது, குழந்தை ஈசோ இயக்கம் பங்களவில் தொடங்கப்பட்டது. பங்குதந்தை அனைத்து குழந்தைகளுக்கும் பரிசுகள் வழங்கினார்.



**தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா, திருமதி ஷைலா | மெரின் சுஜித்**

| FEASTDAYS OF REV. FATHERS - JULY 2023 | |
|---|---|
| Fr. Abin Poovathummoottil | 03 |
| Fr. Ajeesh Attiyil | 03 |
| Fr. Jiji Koippuram | 03 |
| Fr. Robins Kuzhikodil | 03 |
| Fr. Thomas Sathianesan | 03 |
| Fr. Thomas Powathuparampil | 03 |
| Fr. Thomas Thekkethala CMI | 03 |
| Fr. Tinu Kottackaparampil CMI | 03 |
| Fr. Jomy Kamukummattathil | 15 |
| Fr. Kurian Mathew Koipuram | 15 |
| Fr. Rajesh Vayalumkal MCBS | 15 |
| Fr. Joice Chelachuvattil MCBS | 15 |
| Fr. Anoop Karingadu MCBS | 25 |
| Fr.Chacko Puthiyaparampil | 25 |
| Fr. Jacob Aiyammathra | 25 |
| Fr. James Karimankal MCBS | 25 |
| Fr. Shan Ayalloor | 25 |
| Fr. Toji Parambilparambil | 25 |
| Fr. Vinod Kanakalil | 25 |

## MONTHLY AGENDA – JULY 2023

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Sat | 09.00 am | Consecration of St. Thomas Church, Palugal |
| 2 | Sun | 09.00 am | Blessing of St. Chavara Church, Ariyoor, Madurai |
| 3 | Mon | 06.30 am | St. Michael Church, Thettivilai Foundation Stone Blessing |
| 4 | Tue | 10.00 am<br>02.30 pm | College Academic Committee Meeting at Soosaipuram<br>Finance Council Meeting at the Bishop's House |
| 8 | Sat | 09.00am | Marriage Preparation Course at Kalluvila |
| 9 | Sun | 09.00am<br>09.00am | St. Thomas church, Palugal Diamond Jubilee Inauguration<br>Marriage Preparation Course at Kalluvilai |
| 11 | Tue | 05.30 pm | Arukani Kaliyal Kanjalumoodu Forane Priests' Conference at Mukkootukal |
| 13 | Thu | 10.00 am<br>05.00 pm | KKSSS: Central level Meeting for the Save your family Beneficiaries<br>Padanthalumoodu-Nithiravilai Forane Priests' Conference at Munchirai<br>Soosaipuram-Thuckaly Pilankali Forane Priests' Conference at Kanyakumari |
| 16 | Sun | 02.00 pm<br>01.30 pm | CAT: Catechism Annual Day Celebration at Kalluvilai<br>SMYM: SMYM Central Election at Kalluvilai |
| 22 | Sat | 06.00 pm | SMYM : Nadaipayanam from Bishop's House to St. Alphonsa Shrine, Nagercoil |
| 23 | Sun | | CML: Grandparents day celebration at Parish Level |

| | | | |
|---|---|---|---|
| 28 | Fri | 09.30 am | KKSSS: Medical camp at Bengiri |
| 29 | Sat | 09.00 am<br>10.00 am | MJ: Margam kali Competition at Kalluvilai<br>KKSSS: Class for the Educare Students |
| 30 | Sun | | Eparchial level St. Alphonsa celebration at Nagercoil<br>KII: Forane level Drawing Competition |

**Fr.Thomas Powathuparampil, Protosyncellus**

## BISHOP'S ENGAGEMENTS - JULY 2023

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Sat | 09.00 am | Palugal: Consecration of St. Thomas Church, Palugal |
| 2 | Sun | 09.00 am | Madurai: Blessing of St. Chavara Church, Ariyoor |
| 3 | Mon | 06.30 am<br>06.00 pm | Thettivilai: St. Michael Church, Foundation stone blessing<br>Mathapuram: Baptism and Holy Qurbana |
| 4 | Tue | 10.00 am<br>02.30 pm<br>05.00 pm | Soosaipuram: College Academic Committee Meeting<br>Bishop's House: Finance Council Meeting<br>Muzhucode: St. Thomas Church Feast day Holy Qurbana |
| Jul 5 - Aug 17 | | | US VISIT |

**Rev. Fr. Robin Jose, Bishop's Secretary**



New Rector Installation, Minor Seminary, Mukkuttukal, 17.06.2023



Welcome to New Priests, Bishop's house, 10.06.2023



Priests' Conference, Sangamam, 20.06.2023



Kaikkarans and Accountants Meeting,
Sangamam. 25.06.2023




Environmental Day, Pulari Social Service Society, Piranoor Border, Tenkasi Mission, 10.06.2023

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay

Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175

Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570